இருக்கிறது. எனவே, தொழிற்சாலைகளிலே உற்பத்தி செய்யப் படுகின்ற பொருள்களை அதிக விலை கொடுத்து விவசாயிகள் வாங் கக்கூடிய நிலைமை இருப்பதாலே, அவர்களுக்குப் இந்தப் பொருள் கள் குறைந்த விலைக்கு கிடைப்பதற்கு விலைக் கட்டுப்பாட்டைக் கொண்டுவந்தால் அவர்களுக்கு மிகவும் உதவியாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லி, எங்களுடைய உழைப்பாளர் முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கின்ற ஏக்கம் எல்லாம் நலிந்த மக்களுக்குப் பாதுகாப்புத் தாருங்கள், அவர்களுக்கு உதவி தாருங்கள், அப் படித் தருவதன் மூலமாக அவர்களுடைய வாழ்வு மலரும், முன் னேறும், அப்போது தமிழகத்தினுடைய பெருமை வானளாவச் சிறக்கும் பறக்கும் என்று கூறி, என்னுடைய நன்றி அறிதலைத் தமிழக அரசுக்குத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

(முற்பகல் 10—10)

(1) ஒழுங்குப் பிரச்சனைகள்—தொடர்ச்சி.

(ஆ) வினாக்கள்-விடைகள் நேரத்தை நிறுத்திவைப்பதற்கான தீர்மானத்தைப், வாக்கெடுத்து நிறைவேற்றியதாக அறிவித்த, தீர்ப்பை மாற்றி ஒருமனதாக நிறைவேற்றியதாக அறிவிப்பது குறித்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். துணைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் ஆரம்பிக்கிறபோது சபாநாயகர் அவர்கள்கூட என்னைப் பேசச் சொன்னார்கள். இருந் தாலும் வேண்டாமென்று அமர்ந்து விட்டேன். சபையினுடைய மரபைக் காப்பதற்காக ஒரு விஷயத்தைச் சொல்ல விரும்புகி றேன். கேள்வி நேரத்தை ஒத்தி வைத்ததை ஏகமனதாகச் செய் வது நல்லது என்பதற்காகச் சொல்லுகிறேனே தவிர, தவறாகக் கருதக்கூடாது. சபையின் கேள்வி நேரத்தை ஒத்திவைக்க வேண்டுமென்றால் சபை ஏகமனதாக முடிவு செய்ய வேண்டு மென்று 22 விதி கூறுகிறது. அப்படிச் செய்யாமல் ஓட்டெடுத்து முடிவு செய்திருப்பது தவறான முடிவாகும். அது வேண்டாம் என்பதால்தான் மதிப்பிற்குரிய துரைமுருகன் அவர்களையும் நான் கேட்டு அவர்களும் அதை வற்புறுத்தவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, ஓட்டெடுத்து முடிவு செய்ததாக இல்லாமல் அவ்வாறு நடந்ததை நீக்கிவிட்டு ஏகமனதாக நிறைவேறியதாகப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். அஜெண்டா வில் இல்லாத பொருளைப் பற்றி அவை முன்னவர் எப்படி தீர் மானத்தை முன்மொழிய முடியும்? அது சரியில்லை என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம் : Rule 22 : "The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for Questions.'' அவ்வளவுதான். எக்ஸ்டென்ட் பண்ணலாமே தவிர, கேள்வி நேரத்தை ஒத்திவைக்க முடியாது. ஒத்திவைக்க வேண்டுமென்ருல் சபை முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே, நான் கேட்டுக் கொள்கிறேன், இது முடிந்துவிட்ட விவகாரம். துரைமுருகன் அவர்கள் வற்புறுத்தவில்லை என்று கூறுகிருர்கள். சபையின் மரபு கெடக்கூடாது என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

(இ) வினுக்கள்-விடைகள் நேரம் நிறுத்திவைக்கப்பட்டது குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது குறித்து.

திரு. அ. ரகுமான்கான் : பாயிண்ட் ஆப் ஆர்டர். ஒரு ஒழுங்கு பிரச்சனையைக் கிளப்புகிறேன். இந்தச் சபையினுடைய விதிகள் பின்பற்றப்படாமல் இருந்தால், முரண்பாடு இருந்தால் ஒழுங்குப் பிரச்சனை கிளப்பலாம் என்ற அந்த அடிப்படையில் இந்த ஒழுங்குப் பிரச்சனையைக் கிளப்புகிறேன். சட்டமன்ற உறுப்பினர் கூத்தக்குடி சண்முகம் அவர்கள் கேள்வி நேரத்தை நீக்கிய முறை தவறுனது என்பதற்கான பிரிவை எடுத்து வாசித்தார்கள். ஆகவே, தவறுன தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை மறுக்க முடியாது. தீர்ப்பு இரண்டு விதிகளுக்கு புறம்பாக இருக்கிறது. விதிகளில் மிகத் தெளிவாக இருக்கிறது :—

Rule 22 "The first hour of every sitting shall unless the House unanimously resolves otherwise, be available for the asking and answering of questions. The Speaker may, in his discretion extend the time for questions.;'

அவருக்கு டிஸ்க்ரிஷனரி பவர் இருக்கிறது. அதே நேரத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்க வேண்டுமென்றும் இருக்கிறது. 244வது விதியில்:

',Any member may with the consent of the Speaker move that any rule may be suspended in its application to a particular motion before the House and if the motion is carried by three-fourths of the total number of members present and voting at the meeting, the rule in quesion shall be suspended for the time being.